ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2365/64 - 2024 ජනවාරි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.01.04

2365/64 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/KUN/04/07/16/04/94.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/18/2018/WS/464.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில் உட கம்பஹ கோரளே சிறிய பிரிவில் அத்தரகல்ல பல்லேகம பஹல கம்மெத்த கென்கல்ல கிராமத்திலமைந்த நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப் பட்ட 2023.09.18 ஆந் திகதியின் இல. 320849 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இல. 01 மற்றும் 02 இனால் குறிப்பிடப்படும் “ரஜவெல்ல” எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் 0.0770 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : ரஜவெல்ல; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0097 ஹெக்டயார்**

வடக்கு : - ; கிழக்கு : - ; தெற்கு : - ; மேற்கு : - .

**02. துண்டு இல. 02 - காணியின் பெயர் : ரஜவெல்ல; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0673 ஹெக்டயார்**

வடக்கு : காணித்துண்டு இல. 01; கிழக்கு : காணித் துண்டு இல. 01 மற்றும் பி.வ. கண்டி 2584 இல் காணித் துண்டு இல. 105; தெற்கு : பி.வ. கண்டி 2584 இல் காணித்துண்டு இல. 105 மற்றும் 99; மேற்கு : பி.வ. கண்டி 2584 இல் காணித்துண்டு இல. 99 மற்றும் இந்த வரைபடத்தின் காணித்துண்டு இல. 01.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சமந்தி டீ நாகஹதென்ன,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குண்டசாலை,
கண்டி,
2023, திசெம்பர் 26.

EOG 01 - 0042

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: அம்பகோ/3/7/அ/02/12.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/18/2017/PC/577.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பிரிவின் 317B வக்கம கிராம அலுவலர் பிரிவில் ஹத்தேல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.12.14 ஆந் திகதியுடைய ஆரம்ப வரைபட இல. 330220 இன் துண்டு இல. 01 மற்றும் 04 இல் காட்டப்பட்டுள்ள 0.0378 ஹெக்டயார் விஸ்தீரண முடைய சபுஅத்தேகஹமுல எனும் பெயருடைய காணித்துண்டு மற்றும் துண்டு இல. 02 மற்றும் 03 இல் காட்டப்பட்டுள்ள 0.0044 ஹெக்டயார் விஸ்தீரண முடைய காணித்துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : சபுஅத்தே கஹமுல; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : வக்கம கமராலலாகே விமல் சந்திரதாஸ, வக்கம, மொரஹேனகம, ஹட்டன்; விஸ்தீரணம் : 0.0348 ஹெக்டயார்**

வடக்கு : F.V.P. 114, துண்டு இல. 41; கிழக்கு : F.V.P. 114, துண்டு இல. 41 மற்றும் வீதி; தெற்கு : வீதி மற்றும் துண்டு இல. 3; மேற்கு : துண்டு இல. 3, 2 மற்றும் F.V.P. 114, துண்டு இல. 32 மற்றும் 41.

**02. துண்டு இல. 02 - காணியின் பெயர் : - ; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0016 ஹெக்டயார்**

**03. துண்டு இல. 03 - காணியின் பெயர் : - ; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0028 ஹெக்டயார்**

**04. துண்டு இல. 04 - காணியின் பெயர் : சபுஅத்தே கஹமுல; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : வக்கம கமராலலாகே விமல் சந்திரதாஸ, வக்கம, மொரஹேனகம, ஹட்டன்; விஸ்தீரணம் : 0.0030 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 2 மற்றும் 3; கிழக்கு : துண்டு இல. 3; தெற்கு : வீதி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); மேற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை).

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விசாரணையின்போது காணி ஒப்பனைகள் மற்றும் வேறு ஏதேனும் ஆதாரங்கள் இருப்பின் அவற்றையும் முன்வைக்கவும்.

சிதாரா றுவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோறளை,
கினிகத்தேனை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பகமுவ கோறளை,
2023, திசெம்பர் 29.

EOG 01 - 0043